# காஞ்சித்திணையின் வாழ்வியல் சிந்தனைகள்

**மு.செல்வகுமார்**
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை, மாநிலக் கல்லூரி (தன்னாட்சி)
சென்னை

**மலர்:** 3

**இதழ்:** 2

**தொகுதி:** II

**மாதம்:** அக்டோபர்

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

மக்களின் வாழ்க்கையில் தனிப்பட்ட காதல் நிகழ்வினைத் தவிர மற்ற சாமுதாய நிகழ்வினைப் பற்றிய செய்திகளைக் கூறுவது புறத்திணையேயாகும். அவற்றுள், வீரமும் கொடையும் பற்றிய செய்தியினை மிகுதியாக பேசப்படும் ஒரு வகையே புறத்திணை எனப்படும். புறவொழுக்கத்தினைக் குறித்து வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை என்னும் ஐந்து புறத்திணைகளும் போர்கள் பற்றியும் வெற்றிச் சிறப்பையும் கொடைத் தன்மையும் கூறுவதாக உள்ளன. ஆனால், காஞ்சியென்பது வாழ்வின் நிகழ்வினைக் குறித்த நிலையாமையைக் கூறும் திணையாக அமைந்துள்ளது. பாடாண் என்பது ஆண்மகனின் பெருமையினைக் கூறுவதாக காணப்படுகின்றது. எனவே, ஒவ்வொரு வகைப் போர்கள் குறித்தும் ஒவ்வொரு புறத்திணையென்று வழங்கப்பட்டு அதற்கான ஓர் அகத்திணையோடு தொடர்புபடுத்திக் கூறுவதே தொல்காப்பியத்தின் மரபாக உள்ளது. ஆனால், இக்கட்டுரையில் காஞ்சித்திணையினைக் குறித்த மக்களின் வாழ்க்கையில் காணப்படும் நிலையில்லா வாழ்வின் நிகழ்வினைக் காண்பதே நோக்கமாகும்.

### காஞ்சித்திணை

காஞ்சி என்பது நிலையாமை. திணை என்பது ஒழுக்கம். எனவே, நிலையாமையின் ஒழுக்கத்தை எடுத்தியம்புவதே காஞ்சித்திணையாகும். அந்நிலையாமையின் யாதென்று அறியும்போது யாக்கை, இளமை, செல்வம் ஆகிய மூன்றும் மக்கள் வாழ்வில் மட்டும் அல்ல. மற்ற உயிரினங்களுக்கும் பொருந்தும் வகையில் உள்ளது. அவற்றுள், செல்வம் தவிர்த்து நிலைபேறில்லாத இவ்வுலகியலைப் பற்றிக் கொண்டு அதனால் ஏற்படும் பலவகைத் துன்பங்களையும் பொறுத்து நிற்றலாகிய ஒழுக்கத்திணைப் பறைசாற்றுவதே காஞ்சித் திணையெனப்படும். இதனை,

> **“பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற் றானும்**
> **நில்லா உலகம் புல்லிய நெறித்தே.”[1]**

என தொல்காப்பிய நூற்பா புலப்படுத்துகிறது.

நிலையில்லாதவற்றால் நிலையுடையதனை அடையும் முயற்சியே காஞ்சித்திணை என்பது தொல்காப்பியரின் கருத்தாகும். காஞ்சித்திணை இருபது துறைகளைக் கொண்டு விளங்குகிறது. அவற்றுள், பத்துத் துறைகளை ஆண்பாற் காஞ்சியென்றும் அடுத்தப் பத்துத் துறைகளைப் பெண்பாற் காஞ்சியென்றும் இரண்டு வகையாகப் பிரித்துள்ளனர்.

**வாழ்வின் சிந்தனைகள்**

மதுரையை ஆட்சியாண்ட தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு வாழ்வின் நிலையாமையினைக் குறித்த சிந்தனைகளை மென்மையாகப் புலவர் மாங்குடி மருதனார் மதுரைக்காஞ்சி என்னும் சங்க இலக்கியமாகிய பத்துப்பாட்டில் எழுநூற்றி எண்பத்திரண்டு(782) அடிகளில் பாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதனை,

**“திரையிடு மணலினும் பலரே உரைசல்**
**மலர்தலை உலகம் ஆண்டுகழிந் தோரே!”[2]**

என்னும் பாடலடிகள் பறைசாற்றுகிறது.

பெருந்திணையில் கூறப்பட்ட ஏறிய மடல்திறம், இளமை தீர்திறம், தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம், மிக்க காமத்து மிடலொடு தொகைஇ ஆகியன தகாத காமத்தினைச் சுட்டுவதே. எனவே, “அன்பின் ஐந்திணை” என்று முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் ஆகியனவற்றிற்கு வெளியில் நின்றன. அது போலவே நிலையாமையைப் பற்றி எடுத்தியம்பும் காஞ்சித்திணையும் போரினால் ஏற்படும் வெற்றித் தோல்வியைக் கூறும் மற்ற புறத்திணைகளின் வெளியில் நிற்பதே காஞ்சித்திணையாகும்.

**ஆண்பாற் காஞ்சி**

ஆடவனைக் குறித்த பத்து வகையான துறைகள் கொண்டமைந்துள்ளதால் இதனை ஆண்பாற் காஞ்சியென்று பெயர் பெற்றிருக்கலாம். பெருங்காஞ்சி முதல் கொண்டோன் தலையொடு முடிந்த நிலை ஈறாகயுள்ள அத்துறைகள் முழுக்க முழுக்க ஆடவர்களைச் சுட்டுவதாகும்.

**பெருங்காஞ்சி**

மாற்றுதற்கரிய கூற்றுவனின் ஆற்றல் கூறுவது பெருங்காஞ்சியாகும். இது யாக்கை நிலையாமையினைக் குறித்துக் கூறுவதாகும். இதனை,

**“இருங்கடல் உடுத்த இப்பெருங்கண் மாநிலம்**
**தாமே ஆண்ட ஏமங் காவலர்**
**இடுதிரை மணலினும் பலரே சுடுபிணக்**
**காடுபதி யாகப் போகி, தம்தம்**
**நாடு பிறர்கொளச் சென்று மாய்ந்தனரே,**
**அதனால், நீயும் கேண்மதி அத்தை! வீயாது**
**உடம்பொடு நின்ற உயிரும் இல்லை**
**மடங்கல் உண்மை மாயமோ அன்றே....**
**இன்னா வைகல் வாரா முன்னே,**
**செய் நீ முன்னிய வினையே.”[3]**

என்னும் பாடல் எடுத்துரைக்கப்படுகிறது.

நல்லதைத்தான் உங்களால் செய்ய முடியவில்லை என்றாலும், தீமையைச் செய்யாமலாவது இருங்கள். அதுதான் எல்லோராலும் புகழப்படும் நெறியாகும். அது மட்டுமல்ல. அது உங்களை நல்ல நெறியிலே செலுத்தும் என்பதனைக் குறித்து அறியலாம். இந்த சிந்தனையறிவதற்குச் சிறிதும் ஐயமில்லை. இதனை,

**“நல்லது செய்தல் ஆற்றீர் ராயினும்**
**அல்லது செய்தல் ஓம்புமின்ஞு அதுதான்**
**எல்லோரும் உவப்பதுஞு அன்றியும்**
**நல்லாற்றுப் படூஉம் நெறியுமார் அதுவே.”[4]**

என நரிவெரூஉத்தலையார் பாடியுள்ளார்.

**முதுகாஞ்சி**

முதியோர், இளையோர்க்குக் காட்டிய நெறியே முதுமைக் காஞ்சி. இத்துறை இளமை நிலையில்லாதவை என்பதை உணர்த்துகிறது. இதனை,

**“இனிநினைந்து இரக்கம் ஆகின்று திணிமணல்**
**செய்வுறு பாவைக்குக் கொய்பூத் தைஇத்**
**தண்கயம் ஆடும் மகளிரொடு கைபிணைந்து**
**……. …….. ……. …….**
**பெருமூ தாளரேம் ஆகிய எமக்கே.”[5]**

என்னும் பாடல் பாறைசாற்றுகிறது.

**மறக்காஞ்சி**

போர்க்களத்தில் முகத்திலும் மார்பிலும் ஆற்றமுடியாத புண்களைப் பெற்ற மறவன் மேலும், உயிர் வாழ்ந்து அப்புண்களின் கடுமையால் இறப்பதைவிடப் போர்க்களத்திலேயே உயிரை மாய்த்துக் கொள்ளுதலைக் கூறுவது மறக்காஞ்சியாகும். மேலும், தன் மறப்புண்ணைக் கிழித்து உயிரை மாய்த்துக் கொள்வதே. இதனை,

**“நகையமர் ஆயம் நடுங்க நடுங்கான்**
**தொகையமர் ஓட்டிய துப்பின் - பகைவர்முன்**
**நுங்கிச் சினவுதல் நோனான் நுதிவேலான்**
**பொங்கிப் பரிந்திட்டான் புண்.”[6]**

என்ற பாடல் மூலம் அறியலாம்.

**பேய்க்காஞ்சி**

போர் மறவனைப் பாதுகாக்கும் சுற்றத்தார் இன்மையால் புண்பட்டவனைப் பேய்க்காக்கும் முறையினைக் கூறுவது பேய்க்காஞ்சியாகும். இதனை,

**“செருவேலான் திறம் நோக்கிப்**
**பிரிவின்றிப் பேய் ஓம்பின்று.”[7]**

என புறப்பொருள் வெண்பாமாலை பறைசாற்றுகிறது.

மேலும், புறநானூற்றில் பதினொன்றாம் பாடலில் சேரமான் பாலைப்பாடிய பெருங்கடுங்கோவைப் பற்றி பாடிய பேய்மகள் இளவெயினியும், சிவபெருமான் மேல் அந்தாதி பாடிய காரைக்காலம்மையாயரும் பேய்க்குடியைச் சேர்ந்தவர்களே என்று கூறலாம்.

**மன்னைக்காஞ்சி**

ஒருவன் இறந்தபோது அவன் இத்தன்மையினை உடையவன். இவ்வாறு எங்களை ஆதரித்தான். ஆனால், இப்போது எல்லாம் போய்விட்டது என்று கழிந்துபோனதை எண்ணி இரங்கும் நிலையின் தன்மையைக் கூறுவதே மன்னைக்காஞ்சி எனப்படும். இதனை,

**“சிறியகள் பெறினே, எமக்கு ஈயும் மன்னே!**
**பெரியகள் பெறினே.**
**யாம்பாட தான்மகிழ்ந்து உண்ணும் மன்னே!**
**……. …….. …….. …….**
**ஈயாது வீயும் உயிர்தவப் பலவே!”[8]**

என ஔவையாரின் வாயிலாக அறியலாம்.

**வஞ்சினக்காஞ்சி**

இன்னது செய்யத் தவிர்த்தால் இவ்வாறு நடக்கட்டும் என்று கூறும் ஒப்பற்ற நிலையே வஞ்சினக்காஞ்சியாகும். இதனைக் குறித்து புறநானூற்றில் 71,72,73 ஆகிய பாடல்கள் வஞ்சினத் துறையினைச் சுட்டும் வகையில் அமைந்துள்ளன.

**தொடாக்காஞ்சி**

போரில் புண்பட்ட தன் கணவனைப் பேய்கள் தீண்டாமல் மனைவி பாதுகாக்கும் சிறப்பினைக் கூறுவது தொடாக்காஞ்சி என்று பெயர். இதனை,

**"சிறஅஅவர்! துடியர்! பாடுவல் மகாஅஅர்!**
**தூவெள் அறுவை மாயோற் குறுதி**
**இரும்புள் பூசல் ஓம்புமின்ஞு யானும்**
**விளரிக் கொட்பின் வெள்நரி கடிகுவென்."[9]**

என நெடுங்களத்துப் பரணர் பாடியுள்ளார்.

### ஆஞ்சிக்காஞ்சி

கணவன் போர்க்களத்தில் இறந்த வேலினாலே மனைவி தன் உயிரையும் மாய்த்துக் கொண்ட நிலையினைக் கூறுவது ஆஞ்சிக்காஞ்சி எனப்படும். இதனை,

**"மன்னுயிர் நீத்த வேலின் மனையோள்**
**இன்னுயிர் நீப்பினும் அத்துறை யாகும்."[10]**

என்னும் புறப்பொருள் வெண்பாமாலைக் கூறுகிறது.

### மகட்பாற்காஞ்சி

மகளைப் பெறவந்த அரசனொடு பொதும் முதுகுடியினர் தன் மகள் படுதல் அஞ்சிய மகட்பாற்காஞ்சி. இதனைக் குறித்துப் புறநானூற்றில் 336 முதல் 355 ஆகிய இருபது பாடல்களில் இந்த அழிவுகளைக் கூறுகிறது. வேள்பாரியும், பெருஞ்சிக்கல் கிழானும் வேந்தர்களுக்குப் பெண்தர மறுத்து அழிந்தவர்கள். இதனை,

**"நுதிவேல் கொண்டு நுதல்வியர் தொடையாக்**
**கடிய கூறும் வேந்தே தந்தையும்**
**நெடிய அல்லது பணிந்துமொழி யலனே**
**…….. …….. ……. …….**
**அணங்கா யினள்தான் பிறந்த ஊர்க்கே."[11]**

என மதுரை மருதனிள நாகனார் பாடியுள்ளார்.

### கொண்டோன் தலையொடு முடிந்த நிலை

இறந்தக் கணவன் தன் தலையோடு தன் முகத்தையும் மார்பையும் சேர்த்திக் கொண்டோனுடன் தன் உயிரையும் மாய்த்துக் கொள்ளும் நிலையினைக் கூறுவதாகும். தன்னைக் கொண்டான் தலையொடு தனது முலைகளையும் முகத்தையும் இணைத்துக் கொண்டு இறந்த நிலையே என்று இளம்பூரணர் கூறுவர்.

இந்த பத்துத் துறைகள் ஆடவரை முன்னிலைப்படுத்திக் கூறுவதால் ஆண்பாற்காஞ்சி என்னும் பெயரால் அமைந்துள்ள வகையில் காணப்படுகின்றன. போர்க்களத்தில் வெற்றித் தோல்வி என்பது யாருக்கும் நிலையானதல்ல. காஞ்சி உணர்த்துவது வாழ்வில் நிகழும் யாவையும் நிலையில்லாதவையாகக் கருதப்படுகிறது.

### பெண்பாற் காஞ்சி

முன்னைய பத்துத் துறைகளும் ஆண்பாற்குரியது. இனி கூறப்படும் பத்துத் துறையாகிய பூசல் மயக்கம் முதல் காடு வாழ்த்து ஈறாகயுள்ளவைப் பெண்பாற் காஞ்சியாகும். இது பெண்களைக் கொண்டு மையமாக அமைந்துள்ளதால் இப்பெயர் பெற்றுள்ளது.

### பூசல் மயக்கம்

போரில் பெரும் புகழோடு இறந்துபட்ட மறவன் ஒருவனைச் சுற்றி நின்றுகொண்டு அவன் சுற்றத்தினார் ஒப்பாரிக் கொண்டு அழுவதைக் குறிப்பிடுவது பூசல் மயக்கம் என்னும் துறையாகும்.

### தாங்கரும் பையுள்

போர்க்களத்தில் இறந்துபட்ட மறவனைச் சுற்றத்தார் யாருமின்றி அவன் மனைவி மட்டும் தழுவி அழுவதைக் கண்டோரின் துன்பநிலையினைக் கூறுவதே தாங்கரும் பையுள் என்னும் துறையாகும்.

இதனை,

**"உறழ்வேல் அன்ன ஒண்கயல் முகக்கும்**
**அகல்நாட்டு அண்ணல் புகாவே நெருநைப்**
**பகலிடம் கண்ணிப் பலரொடும் கூடி**
**ஒருவழிப் பட்டன்று மன்னே இன்றே**
**…….. ………. ……. …….**
**மெழுகு ஆப்பிகண் கலுழ்நீ ரானே."[12]**

என்று தும்பிசேர்கீரனார் வாயிலாக தெளியலாம்.

### மூதாந்தம்

கணவனொடு இறந்துபட்ட சிறப்பினைக் கருதி வழிச்செல்வோர் கண்டு இரங்கிக் கூறுவது மூதாந்தக் காஞ்சித்துறையே. இதனை,

**"கயலேர் கண்ணி கணவனொடு முடிய**
**வியன்நெறிச் செல்வோர் வியந்து உரைத்தன்று"[13]**

என்னும் புறப்பொருள் வெண்பாமாலைச் சுட்டுகிறது.

ஆனந்தம் - சாக்காடு. இறப்பதைப் போன்ற பெருந்துன்பத்தைக் கூறுவது மூதானந்தம் என்று கூறுவர்.

### முதுபாலை

மிகப் பெரிய மணல் பகுதியில் கணவனை இழந்து தனிமகள் அரற்றும் முதுபாலைக் காஞ்சியென்னும் துறையாகும். இதனை "நனிமிகு சுரத்திடைக் கணவனை இழந்து தனிமகள் புலம்பிய முதுபாலை" ஆகும். புறநானூற்றில் நான்கு பாடல்களாகிய 253 முதல் 256 ஆகியவை முதுபாலை துறையினைச் சுட்டுகின்றன. இதனை,

**"இளையரும் முதியாரும் வேறு புலம்படர**
**எடுப்ப எழாஅய், மார்பம் மண்புல்ல**
**இடைச்சுரத்து இறந்த மள்ள! வியர்த்த**
**வளைஇல் வறுங்கை ஓச்சி கிளையுள்.**
**……… ……… ………. ……..**
**யாங்கு ஆகுவள் கொள்? அயைள் தானே!"[14]**

என கயமனார் வாயிலாக அறியலாம்.

### கையறு நிலை

போக்களத்தில் மாய்ந்தோர் மாட்டு அவருக்காக மிகவும் மனம் வருந்தி, மற்றோரை இரங்கும் நிலையினைக் குறித்துக் கூறுவது கையறுநிலைக் காஞ்சியாகும். இதனை,

**"இளையோர் சூடார்ஞு வளையோர் கொய்யார்ஞு**
**நல்யாழ் மருப்பின் மெல்ல வாங்கி**
**………… ……… …………. …………**
**முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே?"[15]**

என்னும் பாடல் புலப்படுத்துகிறது.

### தபுதாரநிலை

மனைவியை இழந்த தனிமையில் தவிக்கும் கணவனது நிலையினைக் கூறுவது தபுதாரநிலையாகும். இதனை,

**"யாங்குப் பெரிதாயினும் நோயளவு எனைத்தே**
**உயிர்செகுக் கல்லா மதுகைத்து அன்மையின்**
**கள்ளி போகிய களரியம் பறந்தலை**
**……… …….. ……. ………**
**இன்னும் வாழ்வல் எனிதன் பண்பே."[16]**

என்ற பாடல் பறைசாற்றுகிறது.

**தாபதநிலை**

கணவனை இழந்தவள் விதவைக் கோளத்தில் நிற்கும் நிலையினைக் கூறுவது தாபதநிலை என்னும் துறையாகும். அதாவது, கணவனை இழந்த மனைவி தவம்புரிந்து ஒழுகிய நிலைமையினைச் சுட்டுவதாகும். இதனை,

**"கூந்தல் கொய்து குறுந்தொடி நீக்கி**
**அல்லி உணவின் மனைவியொட இனிய**
**புல்லென்ற னையால் வளம்கொழு திருநகர்!"[17]**

என தாயங்கண்ணியாரும்,

**"அளிய தாமே சிறுவெள் ளாம்பல்**
**இளையமாகத் தழையா யினவே இனியே**
**பெருவளக் கொழுநன் மாய்ந்தெனப் பொழுது மறுத்து**
**இன்னா வைகல் உண்ணும்**
**அல்லிப் படூஉம் புல்லா யினவே."[18]**

என ஒக்கூர் மாச்சாத்தனாரின் பாடல்களின் வாயிலாகவும் அறியலாம்.

**பாலைக்காஞ்சி**

போர்க்களத்தில் இறந்துபட்ட கணவனொடு மனைவியும் உடன்கட்டை ஏறும் தன்மையினை எடுத்துரைப்பதே பாலைக்காஞ்சி என்பதாகும். இத்துறையினைக் குறித்து இளம்பூரணர் மாலை நிலையென்று கூறுவர். பாலைக்காஞ்சி என்னும் துறைக்குப் புறநானூற்றில் 246-ம் பாடல் புலப்படுத்துவதை அறியலாம்.

**தலைப்பெயல் நிலை**

தன்மகன் போர்க்களத்தில் புறங்காட்டி ஓடும்போது புறப்புண்பட்டு இறந்தான் என்ற செய்தியினைக் கேட்ட தாய், போர்க்களம் புகுந்து அங்குத் தன்மகனின் மார்பிலும் புண்பட்டு இறந்தான் என்பதை உணர்ந்து அவனைப் பெற்ற போதடைந்த மகிழ்ச்சியைவிட பெரும் மகிழ்ச்சியடைந்தாள் என்று கூறுவது தலைப்பெயல் நிலையாகும். இதனை,

**"நரம்புயெழுந்து உலறிய நிரம்பா மென்தோள்**
**முளரி மருங்கின் முதியோன் சிறுவன்**
**படையழிந்து மாறினன் என்று பலர்கூடி**
**……. ……. …….. ……**
**ஈன்ற ஞான்றினும் பெரிதுஉவந் தனளே."[19]**

என காக்கைபாடினியார், நச்செள்ளையார் பாடியுள்ளனர்.

**காடு வாழ்த்து**

விரிந்த நிலவுலகத்தில் நிலையாமையின் இயல்பை நன்கு அறிந்து பலர் சென்று சுடுகாட்டினை வாழ்த்தும் நிலையே காடு வாழ்த்துக் காஞ்சியாகும். இதனை,

**"முன்னோர் செல்லவும் செல்லாது இன்னும்**
**விலைநலப் பெண்டிரின் பலர்மீக் கூற**
**……. ……… ……… ……….**
**உண்டென உரைப்பரால் உணர்ந்திகி னோரே."[20]**

என மார்க்கண்டேயனரும்,

**"அஞ்சு வந்தன்றுஇம் மஞ்சுபடு முதுகாடு**
**எல்லார் புறனும் நான்கண்டு உலகத்து**
**மன்பதைக்கு எல்லாம் தானாய்**
**தன்புறம் காண்போர்க் காண்பு அறியாதே."[21]**

என தாயங்கண்ணனாரின் வாயிலாகவும் அறியமுடிகின்றன.

தொல்காப்பியத்தில் கூறப்பட்ட காஞ்சித்திணை என்பது நிலையாமையைப் பொருளாகக் கொண்டு பறைசாற்றும் வகையில் ஆண்பாற் காஞ்சியென்றும் பெண்பாற் காஞ்சியென்றும் இருபெரும் பிரிவினைக் கொண்டு ஒவ்வொன்றுக்கும் பத்துப் பத்துத் துறைகளாக வகுத்துள்ளார் தொல்காப்பியர். இத்திணை வாழ்க்கையில் ஏற்படும் ஏற்றத்தாழ்வினை உணர்த்தும் வகையிலும் மற்றும் இன்பம், துன்பம், யாக்கை, இளமை, செல்வம் ஆகியனவை நிலையில்லாத் தன்மையினைச் சுட்டும் வகையில் ஆசிரியர் கூறியுள்ளார் என்று கருதுவதற்கிடமுண்டு. ஆனால், புறப்பொருள் வெண்பாமாலையில் நான்காவது திணையாகக் கொண்டு கூறப்பட்டுள்ள நிலையில் உள்ளது. இந்நூலில் தன் நாட்டின் மேல் படையெடுத்த வஞ்சி வேந்தனை எதிர் ஊன்றும் துறையாக சுட்டியுள்ளார் ஆசிரியர்.

**புறப்பொருள் வெண்பாமாலையில் காஞ்சி**

தன்னை எதிர்த்து வந்த வஞ்சி வேந்தனின் படையைக் கண்டு சீற்றத்துடன் அவனை எதிர்க்க எழுந்த வேந்தன் காஞ்சிப் பூச்சூடுவான். தம் நாட்டின் எல்லையில் பாசறையமைத்து தங்கியுள்ள வஞ்சி மறவரின் படையினைத் தம் நாட்டின் எல்லையைக் கடந்து உள்ளே புகாதபடி தம் நாட்டிலுள்ள காட்டு வழிகளில் காஞ்சி மறவர் பேணுவார்கள். ''எதிர் ஊன்றல் காஞ்சி'' என்ற புறத்திணைக் கொள்கை இடைக்காலத்தில் எழுந்த ஒரு மரபாக இருக்கலாம் என்னும் வகையில் காஞ்சியினைப் புறத்திணையாக குறிப்பிட்டுள்ளனர். ஆனால், தொல்காப்பியர் காலத்தில் அவ்வாறாக இல்லை என்றே தொல்காப்பியத்தின் வாயிலாகவும் சங்க இலக்கியத்தின் வாயிலாகவும் அறியமுடிகின்றன.

எனவே, காஞ்சியென்பது மக்களின் வாழ்வில் ஏற்படும் நிலையினைக் குறித்துக் கூறும் நிலையாமையாகும். இக்கருத்தை மனதில் கொண்டு வாழ்ந்தால் யாரும் யாருக்கும் எதுவும் நேராது. ஆனால், வாழ்க்கையில் காணப்படும் யாக்கை, இளமை, செல்வம் ஆகியவை யாருக்கும் நிலையானவையல்ல என்ற விதியைக் கூறுவதே தொல்காப்பியத்தின் பாடுபொருளாக உள்ளது. எனவே, சமுதாயத்தில் தேவைப்படும் ஒரு வாழ்வின் சிந்தனையாகும் என்பதனைக் குறித்து இரண்டாயிரம் ஆண்டிற்கு முன்பே தொல்காப்பியர் கூறியுள்ளார். ஆகையால், மக்களின் வாழ்வியல் சிந்தனைகளை உணர்த்தும் வகையில் காஞ்சித்திணை அமைந்துள்ளது என்று கூறமுற்படலாம்.

**முடிவுரை**

காஞ்சித் திணையினையும் அவற்றின் துறைகளையும் குறித்து கூறப்பட்டுள்ளது. மாந்தர்களின் வாழ்க்கையில் ஏற்படும் இன்பம், துன்பம், வெற்றி, தோல்வி ஆகியவை நிலையில்லாதவையே. அது மட்டும் அல்ல. யாக்கை, இளமை, செல்வம் எதுவுமே இந்த உலகில் நிரந்தரமானவையல்ல என்று தொல்காப்பியர் வழி நின்று அறியப்படும் உண்மையாகும். இதற்குச் சங்க பாடல்கள் வாயிலாகவும் சான்றுகளாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

**''நிலையில்லா வாழ்வே காஞ்சி!''**

**அடிக்குறிப்புகள்**

1. தொல்.பொருள்.புறத்.நூ.1024.
2. மதுரைக்.அடி.236-237.
3. புறம்.பா.363@1,3-9@16-17.
4. மேலது,பா.195@6-9.
5. மேலது,பா.243.
6. புறப்பொருள்.15.
7. மேலது,பேய்நிலை,76.
8. புறம்.பா.235.
9. மேலது,பா.291@1-4.
10. புறப்பொருள்.83.
11. புறம்.பா.349.
12. மேலது,பா.249@6-4.
13. புறப்பொருள்.262.

14. புறம்.பா.254.
15. மேலது,பா.242.
16. மேலது,பா.245.
17. மேலது,பா.250@4-6.
18. மேலது,பா.248.
19. மேலது,பா.278.
20. மேலது,பா.365@7-11.
21. மேலது,பா.356@7-9

**ஆய்விற்குப் பயன்படுத்திய நூல்கள்.**

1. பாலசுந்தரம்பிள்ளை, தி.சு. (இளவழகனார்), தொல்காப்பியம் கழக வெளியீடு-1953.
2. நாகராசன், ப.வெ. தொல்காப்பியம் சிறப்பகராதி, ISDL.2000.
3. புறப்பொருள் வெண்பாமாலை, சாமுண்டிதேவநாயனார் உரை, உ.வே.சா.பதிப்பு-1963.
4. பத்துப்பாட்டு, பெருமழைப் புலவர் சேமசுந்தரனர், கழகப் பதிப்பு.
5. புறநானூறு மூலமும் உரையும், உ.வே.சா.பதிப்பு-1963..